முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொள்ளாச்சி

நாள்: 24.02.2025 அ.வ.எண். 229/2020 வா.சா.1 ரவிச்சந்திரன்

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு 2 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

1) வழக்கு சொத்து எனது பாட்டனார் பாப்பநாயக்கருக்கு கிரையப்பத்திரப்படி பாத்தியப்பட்டு பிறகு கடந்த 17.07.1958 தேதியிட்ட செட்டில்மெண்ட் ஆவணப்படி எனது தகப்பனாருக்கு பாத்தியப்பட்டது என்று நான் சொல்வது தவறு என்றால் சரியல்ல.

2) வழக்கு சொத்துக்களை அருணாச்சலம் செட்டியார் உடுமலைபேட்டை உரிமையில் நீதிமன்றத்தில் நடைபெற்ற ஏலத்தில் எடுத்து பின்னிட்டு மேற்படி அருணாச்சலம் செட்டியாரின் அதிகார முகவர் அவ்வாறு ஏலம் எடுத்த சொத்தை சாகின்நார் கெங்கம்மாள் என்பவருக்கு கிரையம் கொடுள்ளார் என்றால் தவறு.

3) மேற்படி சாகின்நார் கெங்கம்மாள் என்பவரிடம் இருந்து வழக்கு சொத்துக்களை எனது தாத்தா பாப்பநாயக்கர் கடந்த 11.12.1942 தேதியிட்ட கிரையப்பதிரம் மூலம் கிரையம் பெற்றார் என்றால் அது பற்றி எனக்கு தெரியவில்லை. கடந்த 1934 ம் ஆண்டு கிரையப்பத்திரம்தான் என்னிடம் உள்ளது.

4) வழக்கு சொத்து எவ்வாறு வந்தது என்பது குறித்து தவறான சங்கதிகளை வழக்குரையில் கூறி பொய்யான வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. உரிய உரிமம் மூலம் இல்லாமல் எனது தகப்பனார் பெயரிலான கடந்த 17.07.1958 தேதியிட்ட செட்டில்மெண்ட் ஆவணமும், எனது பெயரிலான கடந்த 2005 ம் வருடத்திய விடுதலை பத்திரமும் சட்டப்படி செல்லாத ஆவணங்கள் என்றால் சரியல்ல.

5) வழக்கு 2 ம் அயிட்ட சொத்து, வழக்கு 1 வது அயிட்ட சொத்தில் முன் வாசலாக எனது தாத்தா கடந்த 1934 ம் ஆண்டு கிரையம் பெற்றது முதலே அனுபவித்து வருவதாக எனது முதல் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். எனது தாத்தா பெயரிலான கிரையப்பத்திரத்தை தாவா 2 வது அயிட்ட சொத்து 1 வது அயிட்ட சொத்தின் முன் வாசல் என்று குறிப்பிடபடவில்லை என்றால் சரிதான்.

6) வா.சா.ஆ.1 விடுதலைப்பத்திரத்தில் 2 அயிட்ட சொத்து குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் இரண்டு சொத்துக்கள் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. வா.சா.ஆ.1 கிரையப்பத்திரத்தில் கண்ட இரண்டு அயிட்ட சொத்துக்களும், வழக்கு சொத்துக்களும்

வெவ்வேறானவை என்றால் சரியல்ல.

7) வா.சா.ஆ.1 விடுதலைப்பத்திரத்தில் இரண்டாவதாக குறிப்பிடப்பட்டுள்ள சொத்தையே இரண்டு அயிட்ட சொத்துக்களாக பிரித்து வழக்குரையில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல. நீதிமன்றத்தில் தவறான சங்கதிகளை கூறி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

8) வழக்கு 1 அயிட்ட சொத்திற்கு தென்புறத்தில் கிழமேலாக தடம் உள்ளது என்றால் முன்பு இருந்தது, தற்போது கிடையாது. எனது வா.சா.ஆ.1 விடுதலைப்பத்திரத்திலையே தென்புறத்தில் கிழமேலாக உள்ள தடம் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் அந்த தடத்தை நான் அடைத்துவிட்டேன். கிழபுறம் உள்ள தடம் அப்படியே உள்ளது.

**2 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் வேண்டுக்கோளுக்கிணங்க குறுக்கு விசாரணை வேறு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.**